பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : புரட்டாசி 25 (11—10—68) வெள்ளி ★ வெளியூர் : புரட்டாசி 26 (12—10—68) சனி [இதழ் : 96

## கழக ஆட்சிக்கு நற்சான்று!

உதகை, அக் 11—

"காங்கிரசு அரசின் நல்ல கொள்கைகளைத் தி.மு. கழக அரசு செயல்படுத்திவருகிறது.

"காங்கிரசின் நல்ல கொள்கைகளைத் தி.மு. கழக அரசு மாற்றவுமில்லை - ஒதுக்கிவிடவுமில்லை.

"தி.மு. கழக அரசு நல்ல அரசாகும்"

என்று நாடாளுமன்ற காங்கிரசுக் கட்சிச் செயலாளரும் பொதுத் துறைப் பணி ஏற்புக் குழு உறுப்பினருமான ஆர்.பி. சின்கா கூறியுள்ளார்.

# காந்தி வழியில் அண்ணா ஆட்சி

## 120 இடங்கட்கு 395 பேர்

### 34 இடங்களில் நேரடிப் போட்டி

### காங்கிரசு ஒருபுறம் -- கழகத் தோழமைக் கட்சிகள் மறுபுறம்

### சென்னை மாநகராட்சித் தேர்தல் --- இறுதி நிலவரம்

சென்னை, அக். 11

சென்னை மாநகராட்சித் தேர்தலில், வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கு இறுதி நாளான நேற்று மொத்தம் 112 பேர், தங்கள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற்றுள்ளனர்; எனவே, 120 இடங்களுக்கு 395 பேர் போட்டியிடுகின்றனர் என்பதுதான இன்றைய நிலவரமாக இருக்கிறது. (முதலில் 507 பேர், வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தனர்.)

மொத்தம் 34 இடங்களில் நேரடிப் போட்டி நடக்கும்; இதில், தி.மு. கழகமும் – காங்கிரசும் 30 இடங்களில் நேரடிப் போட்டியிடுகின்றன.

69-வது வட்டத்தில் மட்டும் 8 பேர் போட்டியிடுகின்றனர்: அதிக எண்ணிக்கையில் போட்டியிடும் வட்டம் இது ஒன்றுதான்.

கட்சிவாரியாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | |
|---|---|
| காங்கிரசு | 120 |
| தி. மு. கழகம் | 96 |
| சுதந்தரா | 7 |
| முஸ்லிம் லீக் | 7 |
| உழைப்பாளர் கட்சி | 2 |
| திராவிடர் கழகம் | 2 |
| தமிழரசுக் கழகம் | 2 |
| கம்யூனிஸ்டு (வலது) | 2 |
| கம்யூனிஸ்டு (இடது) | 2 |
| சுயேச்சைகள் | 115 |

### வாக்குச் சாவடிகள்

120 வட்டங்களிலும் மொத்தம் 1,336 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும். 10 வட்டங்கள் அடங்கியுள்ள சைதாப்பேட்டை தொகுதியில்தான் அதிகமான வாக்குச் சாவடிகள் (அதாவது 144) இருக்கும்; பார்க் டவுன் தொகுதியில்தான் குறைந்த அளவு வாக்குச் சாவடிகள் (அதாவது 88) இருக்கும்.

ஒவ்வொரு தொகுதியிலும் எத்தனை வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுமென்ற விவரம் :—

| | |
|---|---|
| வண்ணாரப்பேட்டை | 107 |
| துறைமுகம் | 97 |
| பேசின் பிரிட்ஜ் | 128 |
| பார்க் டவுன் | 88 |
| பெரம்பூர் | 124 |
| புரசைவாக்கம் | 117 |
| எழும்பூர் | 110 |
| திருவல்லிக்கேணி | 101 |
| மயிலாப்பூர் | 102 |
| தியாகராய நகர் | 116 |
| சைதாப்பேட்டை | 144 |
| ஆயிரம்விளக்கு | 102 |

### தேர்தல் ஏற்பாடுகள்

அக்டோபர் 27-ம் நாள் நடைபெறும் தேர்தலில், வாக்குப் பதிவுகள் ஒழுங்காக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள், இறுதியாக்கப்பட்டு வருகின்றன.

காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இடைவிடாமல் வாக்குப் பதிவு நடைபெறும்; இடைவேளை ஓய்வு இராது.

மொத்தம் 12 தேர்தல் அதிகாரிகள் இருப்பர். ஒவ்வொரு தேர்தல் அதிகாரியின் கீழும் ஒரு டெபுடி கலெக்டரும், ஒரு தாசில்தாரும் இருப்பார்கள்.

வரும் புகார்களை ஏற்பதற்காக ஒவ்வொரு தேர்தல் அதிகாரியும் தமது அலுவலகத்திலிருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

டெபுடிக் கலெக்டரும் தாசில்தாரும் இடைவிடாமல் ஓட்டுச் சாவடிகளைப் போய்ப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்; தத்தம் வட்டங்களில் உள்ள ஒவ்வொரு வாக்குச் சாவடியையும் அரை மணி நேரத்துக்கு ஒருமுறை போய்ப் பார்ப்பார்கள்; ஆங்காங்கு தெரிவிக்கப்படும் புகார்களை உடனுக்குடனே கவனித்து முடிவெடுக்க இவர்களுக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

இதைத் தவிர மாநகராட்சி ஆணையரும், ரெவினியூ அதிகாரியும், தேர்தல் பணிகளைக் கவனிக்கும் தனி டெபுடி கலெக்டரும் தேர்தலன்று புகார்களைக் கவனிப்பதற்காக மாநகராட்சி அலுவலகத்திலேயே இருப்பர்.

மாநகராட்சி அலுவலகத்தில் புகார்களைக் கவனிப்பதற்காகத் தனியாகச் சிப்பந்திகள் இருப்பர்; மேற்கூறிய 3 அதிகாரிகளுள் யாருக்காவது புகார் கிடைத்த 15 நிமிடத்துக்கெல்லாம், அந்தந்த இடங்களுக்குப் போய்க் கவனிப்பதற்காக இந்தச் சிப்பந்திகள் அனுப்பிவைக்கப்படுவர்.

### வாக்கு எண்ணிக்கை

"மறுநாளே அதாவது, அக்டோபர் 28-ந் தேதி—12 இடங்களில் வாக்குகள் எண்ணப்படும்; 120 வட்டங்கள் சம்பந்தமாகவும் அன்றையத்தினமே முடிவுகள் அறிவித்துவிட முடியும் என்று நம்புகிறேன்" என, மாநகராட்சி ஆணையர் கூறினர்.

வாக்குகள் எண்ணும் இடம் ஒவ்வொன்றிலும், முடிவுகள், போர்டுகளில் அறிவிக்கப்படும்; ஒலிபெருக்கிமூலம் அறிவிப்பு இராது.

## காந்தியின் ஆத்மா வாழ்த்திக்கொண்டேயிருக்கும்

### தி.மு. கழக அரசுக்கு செகசீவன் ராம் பாராட்டு

காஞ்சிபுரம், அக். 11—

"சுதந்தரம் அடைந்து 20 ஆண்டுகள் ஆகியும், இன்னும் ஏழைகள் ஏழ்மையுடன் போராடிக்கொண்டு இருக்கிறார்கள்; குடிநீர் கிடைக்காத கிராமங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன; இதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

"காந்தியின் திட்டங்கள் பல உள்ளன; அவற்றை நிறைவேற்றுவதற்கு, அரசியல் வேறுபாடுகளை ஒழித்துவிட்டு, நாம் பாடுபட வேண்டும்; அதற்காக உறுதி எடுத்துக்கொள்வோம்.

"நாட்டில் சமுதாய -- பொருளாதார உயர்வு காண்பதற்கு காந்தி விரும்பினர்; அதற்குக் கலப்புத் திருமணத்தையும், குடிசைத் தொழிலையும் ஊக்குவித்தார்; அவற்றுக்காகப் பாடுபட்டார். அந்தத் திட்டங்களைத் தமிழக அரசு, நடைமுறையில் கடைபிடித்து வருகிறது. கலப்புத் திருமணங்களை தமிழக அரசு ஊக்குவிப்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

"காந்தியின் மற்றொரு திட்டமான மதுவிலக்குக் கொள்கையைத் தமிழக அரசு உறுதியுடன் செயல்படுத்துகிறது; இதற்காகத் தமிழக அரசைப் பாராட்டுகிறேன்.

"மதுவிலக்குக் கொள்கையில் உறுதியுடன் இருப்பது என்பது பெரிய காரியம். இதற்காகத் தமிழக அரசை காந்தியின் ஆத்மா வாழ்த்திக்கொண்டே இருக்கும் --- சந்தேகம் இல்லை"

இவ்வாறு மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராம் அவர்கள், காஞ்சிபுரம் காந்தி மைதானத்தில் கடந்த ஒரு வார காலமாக நடைபெற்றுவந்த காந்தி நூற்றாண்டு விழாவின் கடைசி நாள் அன்று கலந்துகொண்டு பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினர்.

### கே. ஏ. மதியழகன்

விழாவுக்கு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இன்று நம்மிடையே காந்தி இல்லை என்றாலும், காந்தீய முறையில் நாட்டைச் செயல்படுத்தும் முதல் அமைச்சர் அண்ணா இருக்கிறார்; ஆகவே 'நடமாடும் காந்தி'யாக இன்று அண்ணாவைப் பார்க்கிறோம்!"

### ஏ. கோவிந்தசாமி

அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமியும் விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தமிழ்நாட்டில் காங்கிரசு அல்லாத ஆட்சி நடந்தாலும், காந்தீய வழியில் அரசு நடக்கிறது. நாங்கள் காந்திக்கு விசுவாசம் உள்ளவர்களாக இருக்கிறோம்"

தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை (தி. மு. க.) சி. ஆர். உமாபதி (காங்), ஏ. மு. பெருமாள் (தமிழரசுக் கழகம்) கந்தசாமி (சுதந்திரா), வி. சுப்பிரமணியம் (வலது கம்யூ), சி. பி. இராசமாணிக்கம் (தி. க.) ஆகியோரும் பேசினர்.

மத்திய அமைச்சர் செகசீவன் ராமுக்கும், தமிழக அமைச்சர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## டில்லியின் மிரட்டலுக்கு அஞ்சோம்!

### நாங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தாம்

### மத்திய அரசின் நடவடிக்கையே அரசியல் சட்டத்துக்கு முரணானதாகும்

### உள்துறை அமைச்சர் சவானுக்கு கேரள முதல்வர் தரும் பதில்

கள்ளிக்கோட்டை, அக். 11

'கேரள அரசைப் பதவியிலிருந்து விலக்குவதற்காக, 'மத்திய ரிசர்வ் போலீசை அனுப்புவோம்; அல்லது இராணுவத்தை அனுப்புவோம்' என்று பயமுறுத்துவதாலோ 'அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356-வது விதியைப் பயன்படுத்துவோம்' என்றெல்லாம் மிரட்டுவதாலோ கேரள அரசு அஞ்சிவிடாது"

என்று முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாடு இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நாங்கள் சாகும்வரையில் ஆட்சி நடத்திக்கொண்டிருப்பதாக யாரிடமும் வாக்குறுதிக் கொடுக்கவில்லை!

'தாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்' என்று மத்திய அரசினர் சொல்லிக் கொள்ளலாம்; நாங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தாம்; எங்களுக்கும் சில உரிமைகள் உண்டு; மற்றவர்கள் அந்த உரிமைகளில் தலையிடுவதை அனுமதிக்கமாட்டோம்.

மத்திய அரசு ஊழியர் வேலை நிறுத்தத்தின்போது கேரள அரசு நடந்துகொண்ட விதத்தைப் பற்றிப் புகார்கள் கூறப்படுகின்றன. நாடாளுமன்றத்தின் முடிவுகளைச் செயல்படுத்த மாநில அரசு கடமைப்பட்டிருக்கிறது; ஆனால், மத்திய உள்துறை அமைச்சரின் அகம்பாவம் பிடித்த உத்தரவுகளை நாங்கள் பொருட்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை.

மத்திய அரசு பிறப்பித்த அவசரச் சட்டத்தின் சில விதிகளை நாங்கள் செயல்படுத்த மறுத்ததன் மூலம், அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறிவிட்டோம் என்பதே எங்கள்மீது உள்ள முக்கிய புகாராகும்; ஆனால், அந்த அவசரச் சட்டமே அரசியல் அமைப்புக்கு முரணானது என்று நாங்கள் கருதுகிறோம்.

அரசியல் அமைப்பை மீறுவது மக்களின் நலன்களுக்கு உகந்ததாயிருக்குமென்றால், அப்படிச் செய்வது பெரிய பாபம் என்று நான் நினைக்கவில்லை.

வேலை நிறுத்தத்தின்போது மத்திய ரிசர்வ் போலீசுப்படையைக் கேரளத்துக்கு அனுப்பியது அர

(4-ம் பக்கம் பார்க்க)

# படிப்பின் தரம் உயரப் பாடுபடுவீர்!

## மாணவர் மனத்தில் அறிவுக் கனவுகள் தோன்ற வேண்டும்

## கல்விக் கூடங்களில் அறிவாளர் படங்களை வைப்பீர்!

### கடலூர் மகளிர் உயர்நிலைப் பள்ளித் திறப்பு விழாவில் அமைச்சர் நெடுஞ்செழியன் வேண்டுகோள்

கடலூர், அக். 10—

"இன்று தமிழக மாணவர்களிடையே கல்வித் தரம் குறைந்துள்ளது.

"முப்பதாண்டுகளுக்கு முன்னர் எட்டாவது வகுப்புவரையில் படித்தவர்களிடம் இருந்த அறிவுத் திறன், இன்றையப் பட்டதாரி மாணவர்களிடம் காண்பது அரிதாக இருக்கிறது.

"பழைய மெட்ரிகுலேஷன் வகுப்புப் படித்தவரிடம் இருந்த கல்வித் தரம், இன்றைய நிலையில் தமிழகத்தில் இல்லை என்பதை மிக்க வெட்கத்தோடும் வேதனையோடும் தெரிவிக்கவேண்டியிருக்கிறது!"

இவ்வாறு தமிழகக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அக். 5-ம் நாளன்று மஞ்சை நகர் வேணுகோபாலபுரத்தில், அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

கடலூர் நகராட்சித் தலைவர் திரு. வி. தங்கராஜ் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

நகராட்சி உறுப்பினர் இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ. அவர்கள், இரா. நெடுஞ்செழியன் உருவப் படத்தைத் திறந்துவைத்தார்.

அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"பள்ளிகளில் என் போன்றவர்களின் படம் வேண்டாமென நான் பலமுறை கூறி வருகிறேன்.

பள்ளி வகுப்புகளில், மாணவர்கள் மனத்தில், அறிவுக் கனவுகளை உண்டாக்கும் வகையில் பெரும் அறிவாளிகளான நியூட்டன், ஆர்கிமெடீஸ், சாக்ரடீஸ், ஷேக்ஸ்பியர், காந்தி, நேரு போன்றவர்களின் படங்களும், குறிப்புகளுமே இடம் பெற வேண்டும்; அவை மாணவர் மாணவியரிடையே கல்வித் தரத்தை ஊக்குவிக்கும்.

சாதாரண நிலையில் இருந்த நோபல், இன்று உலகப் புகழ் பெற்ற பெயரோடு விளங்குவார் என எந்தத் தலைவரும் முதலில் நினைக்கவில்லை!

இன்று சில பள்ளிகளில், 'காலண்டர்'கள் என்ற பெயரால் திரைப்பட நடிகர்களின் படங்கள் காட்சியளித்ததை அகற்றச் சொன்னேன். ஏனெனில், இத்தகைய படங்களால் மாணவர்களின் மனம் காலண்டரில் செல்லாமல் மேலே காணப்படும் படங்களின்மீது சிதறுண்டு போகும் அவலநிலை ஏற்பட ஏதுவாகும்.

தமிழக அரசு தனியார் துறையில் கல்விக்கு ஏராளமான முதலீடு செய்துவருகிறது.

இன்று தமிழகத்தில் உள்ள 123 கல்லூரிகளில் 32-தான் அரசினர் கல்லூரிகள்.

நாட்டின் வருவாயில் 24 சதவிகிதத்தைப் பொதுக் கல்விக்கெனச் செலவழித்தும், 42 சதவிகித மக்கள்தான் படித்துள்ளனர்.

படிப்பவர்களில் 24 சதவிகிதம் பேர் ஐந்தாம் வகுப்புவரையிலும், உயர்நிலைப் பள்ளி நிலையைத் தாண்டி கல்வி கற்பவர்கள் 6 சதவிகிதமும், கல்லூரியில் சென்று பட்டப் படிப்பு பெறுபவர்கள் ஒன்றரை சதவிகிதமுமாகவே உள்ளனர்.

இத்தகைய கல்விநிலைப் புள்ளியைக் கூறுவதன் நோக்கம், 'நாம் எவ்வளவு தூரம் கல்வியில் முன்னேற்றம் பெற்றுள்ளோம் -- இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்' என்பதை மக்கள் உணருவதற்காகத்தான்!

இன்றைய மாணவ -- மாணவியர் தங்களுக்குள்ள பாடங்களைப் பல வழிகளில் ஒதுக்கிவிட்டு, ஒரு சில கேள்விகளுக்கு மட்டுமே விடை அளிக்கத் தயாரித்துக் கொள்கின்றனர்; இதனால் அறிவு வளர்ச்சி தடைப்படுகிறது; இந்நிலையைத் தவிர்ப்பதோடு, நூலகங்களிலுள்ள பயனுள்ள புத்தகங்களையும் படித்து அறிவு வளர்ச்சி பெற வேண்டும்.

செல்வந்தர்கள், தங்கள் செல்வத்தைக் கல்விக்குச் செலவிட்டால், அவர்கள் மறைந்த பின்னரும், நிலைத்த புகழும் பெயரும் ஏற்படுகிறது.

மாணவர்கள் தங்கள் நேரத்தையும், அறிவு ஆற்றலையும் கல்விக்கே அர்ப்பணித்தால், ஆசியாவில் ஜப்பான் முன்னேறியதுபோல இந்தியாவில் தமிழகம் முன்னேறும்.

ஒருகாலத்தில் உயர் நிலையில் இருந்த கல்வி இன்று தமிழகத்தில் தரக்குறைவு ஏற்பட்டுள்ளதன் காரணம், மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவதைவிட்டு சாதாரண காரணங்களுக்காகக் கூடப் பள்ளிகளை மூடச் செய்வதுதான்.

ஆகவே, மாணவர்கள் கட்டுப்பாடுள்ளவர்களாகத் திகழ்ந்தால்தான், கட்டுப்பாடான சமுதாயத்தை உருவாக்க இயலும். இதில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் ஒத்துழைத்து நாட்டில் கல்விச் செல்வம் பெருக உறுதுணையாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

## காவிரிப் படுகையில் எண்ணெய் வளம்

### அதிக அளவில் சோதனை நடத்தப்பட வேண்டும்

### இரஷ்ய நிபுணர் கருத்து

சென்னை, அக். 10—

காரைக்காலுக்கும் — நாகப்பட்டினத்திற்கும் அருகில் காவிரிக் கரையில் 8 ஆழமான கிணறுகள் தோண்டி நடத்தப்பட்டு வரும் சோதனைகள் மூலம் -- இதுவரை எண்ணெய் எதுவும் கிடைக்காவிடினும், சரியான இடங்களில் அவை தோண்டப்பட்டிருப்பதாகவும், இன்னும் அதிக அளவில் சோதனைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் இரஷ்ய மண்ணியல் நிபுணர் பேராசிரியர் வாசிலாவ் எண்ணெய்—வாயுக் குழு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

சில எண்ணெய்க் கிணறுகள் ஆழமே இல்லாமலும், மற்றும் சில எதிர்பார்க்கப்பட்டதைக் காட்டிலும் அதிக ஆழம் உள்ளவையாகவும் இருக்கின்றன; ஆகவே, ஆய்வு சரியான முறையில் நடத்தப்பட்டிருக்கிறதா என்று அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

இந்தப் படுகை முழுவதிலும் ஆழமில்லாத பகுதியில் எண்ணெய் இருக்கக்கூடிய பல இடங்கள் கண்டுபிடிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"காவிரிக் கரைப் பகுதியில் தீவிர சோதனைகள் நடத்தப்பட வேண்டும்" என்று நிபுணர் வாசிலாவ் கூறியுள்ளார்.

நிபுணர் வாசிலாவ் ஐ. நா. மூலமாக அனுப்பப்பட்டவர்; இந்தியாவில் எண்ணெய்ச் சோதனைகள் நடைபெறுவது எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கின்றன என்பது பற்றிப் பரிசிலனை நடத்துவார்.

# அறிவைப் பெருக்கி அறவழி நடப்பீர்!

## மாணவர்கட்குக் காந்தியார் கூறிய அறிவுரை

"உங்களது அறிவையும், கல்வியையும் தராசின் ஒரு தட்டிலும் -- உண்மையையும் தூய்மையையும் மற்ற தட்டிலும் வைத்தால் -- இரண்டாவது தட்டுதான் கீழே இறங்கும்.

"இன்று, பள்ளி செல்லும் குழந்தைகளிடையே அறவழித் தூய்மை இல்லாதிருப்பதைப் பார்க்கிறோம்; ஒரு தொத்து நோயைப்போல இது அவர்களிடையே பரவி, அழிவுக்கு ஆதாரமாக இருந்துவருகிறது.

"ஆதலால், சிறுவர் சிறுமியர் உள்ளத்தையும் உடலையும் தூய்மையாய் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களது அறிவுக்கும், பாட நூற்களிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டவற்றுக்கும் ஏற்ப வாழவில்லையென்றால் அவை வீணாகப் போய்விடும்!"

என்று, காந்தியடிகள் மாணவர்களை எச்சரித்திருக்கிறார். 'மாணவர்கள், நாட்டுத் தொண்டிலும் ஈடுபட வேண்டும்' என்று அவர் வலியுறுத்தியுள்ளார். மாணவர்களைப் பற்றி அவர் கருத்தறிவித்திருப்பதாவது:—

பழைய முறைகளைச் சீர்திருத்தும் அலுவல்களை மாணவர்கள் தாம் ஏற்று நடத்தவேண்டும். நாட்டில் உள்ள நல்லவை அனைத்தையும் ஒன்று திரட்டிப் பாதுகாப்பதும், சமூகத்தில் புகுந்துள்ள எண்ணற்ற தீமைகளை அச்சமின்றி அகற்றுவதும் மாணவர்களின் கடமையாகும்.

நாட்டின் பணிக்காக உங்கள் திறமையைப் பயன்படுத்த வேண்டும். இதற்குப் பரந்த உள்ளமும், சந்தேகத்துக்கிடமில்லாத நடத்தையும் வேண்டும்; இவை இரண்டும் இருந்தால், மற்ற தகுதிகள் அனைத்தும் தானாகவே வந்துவிடும்.

நம்பிக்கை உள்ள மாணவர் -- அச்சத்தை அகற்றிய மாணவர் -- தமது அலுவலிலேயே ஒன்றுபட்டுவிட்ட மாணவர் -- கடமையைச் செய்து உரிமையைக் காணும் மாணவர் -- 'இந்த இருள் தற்காலிகமானது' என்பதையும், 'ஒளி, தெளிவாய்த் தெரிகிறது' என்பதையும் உணர்ந்துகொள்வார்.

நாட்டின் நாளைய தந்தையராய் உரிமை கொண்டாடும் இன்றைய இளைஞர்கள், நல்லோராக வாழவேண்டும். உப்பு தனது உப்புத் தன்மையை இழந்துவிட்டால் அதை வேறு எங்கிருந்து பெற முடியும்?

பள்ளிக்கூடத்தில் நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள் என்பதைப் பற்றியோ, எதைக் கற்றுக் கொள்ளவில்லை என்பதைப் பற்றியோ எனக்குக் கவலையில்லை; ஆனால் இரண்டு நிபந்தனைகளை நீங்கள் நிறைவு செய்ய வேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் -- எத்தகைய இன்னல் நேர்ந்தாலும் -- அச்சமின்றி உண்மையைப் பின்பற்ற வேண்டும்.

உண்மைப் பற்றுள்ள ஒரு சிறுவன் -- துணிச்சல் உள்ள ஒரு சிறுவன், ஒரு ஈயைக்கூட துன்புறுத்த எண்ணமாட்டான். அவன் தனது பள்ளிக்கூடத்தில் உள்ள பலவீனமான சிறுவர்களைப் பாதுகாத்து உதவி செய்வான். பள்ளிக்கூடத்துக்குள்ளேயும் சரி -- வெளியேயும் சரி -- யாருக்கு உதவி தேவைப்பட்டாலும் உதவியளிக்க ஆயத்தமாக இருப்பான்.

உள்ளத்திலும், உடலிலும், செயலிலும் தூய்மை இல்லாத சிறுவனைப் பள்ளிக்கூடத்திலிருந்து விரட்ட வேண்டும். இரக்கக் குணம் கொண்ட ஒரு சிறுவன் எப்போதும் உள்ளத்தைத் தூய்மையாய் வைத்துக்கொண்டிருப்பான். அவனது பார்வை எப்போதும் நேராகத்தான் இருக்கும். அவனது செயலில் மாசு இருக்காது. இந்த வாழ்க்கையின் அடிப்படை நெறிகளைக் கற்றுக்கொள்வதற்கு நீங்கள் எந்தப் பள்ளிக்கூடத்துக்கும் செல்ல வேண்டாம். இந்த மூன்று நற்குணங்களும் இருந்தால், உறுதியான அடிப்படையில் நீங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளலாம்.

### கிராமத் தொண்டு

உங்களுடைய திறமைகளை ரூபாய் நாணயமாக மாற்றுவதற்குப் பதில் நாட்டின் பணிக்காகப் பயன்படுத்த வேண்டும். நீங்கள் ஒரு மருத்துவ நிபுணராக இருந்தால், இந்நாட்டில் உங்களது மருத்துவத் திறமையைப் பயன்படுத்தும் வகையில் வேண்டிய அளவுக்கு நோய்கள் இருக்கின்றன.

நீங்கள் ஒரு வழக்கறிஞராக இருந்தால், இந்தியாவில் வேண்டிய அளவுக்குப் பூசல்களும் தகராறுகளும் உள்ளன; தகராறுகளை அதிகமாக்குவதற்குப் பதில் இவற்றைத் தீர்த்து வைக்கலாம்.

நீங்கள் ஒரு எஞ்சினியராக இருந்தால், உங்கள் மக்களின் வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப மாதிரி வீடுகளை வடிவமைத்துக் கொடுக்கலாம்; ஆரோக்கியமான நல்வாழ்வுக்கு வேண்டிய காற்றோட்டமுள்ள வீடுகளை அமைக்கலாம்; நீங்கள் கற்ற தனைத்தையும் பயன்படுத்த முடியும்.

ஊமையராய் வாழும் இலட்சக் கணக்கான மக்களைப் பற்றித்தான் மாணவர்கள் சிந்திக்க வேண்டும். ஒரு மாநிலம் -- ஒரு நகரம் -- ஒரு வகுப்பு -- ஒரு சாதி -- என்ற முறையில் சிந்திக்கக் கூடாது; 'இலட்சக்கணக்கான மக்கள் வாழும் ஒரு நாடு' என்ற முறையில் -- தீண்டாதோரும், குடிகாரர்களும், ஒழுக்கங் கெட்டவர்களும் வாழும் நாடு -- என்ற முறையில், அந்த நாட்டின் நல்வாழ்வுக்காகச் சிந்திக்க வேண்டும். நம்மிடையே இத்தகையோர் வாழ்வதற்கு நம்தான் பொறுப்பு என்பதை உணரவேண்டும்.

விடுமுறை நாட்களைக் கிராமத் தொண்டிற்காகவே மாணவர்கள் செலவிட வேண்டும்.

வழக்கமாகச் செல்லும் இடங்களுக்குச் செல்லாமல், தங்கள் கல்வி நிறுவனங்களுக்கு அருகாமையில் உள்ள கிராமங்களுக்கு நடந்து சென்று -- கிராம மக்களின் வாழ்க்கை நிலைமையை அறிந்துகொண்டு -- அவர்களை நண்பர்களாக்கிக்கொள்ள வேண்டும்.

பிறகு மாணவர்கள் அவர்களுக்கிடையே வாழும்போது, இத்தகைய தொடர்புகளின் காரணமாக அந்தக் கிராமவாசிகள், மாணவர்களை நண்பர்களாக வரவேற்பார்கள். சந்தேகக் கண்ணுடன் பார்க்கமாட்டார்கள்.

விடுமுறை நாட்களில்தான் மாணவர்கள் தங்களது வழக்கமான அன்றாட அலுவல்களை மறந்து சுய உதவியில் கவனம் செலுத்த வேண்டும். நான் மேலே குறிப்பிட்ட கிராம சேவைதான் மிகச் சிறந்த பொழுதுபோக்கு. பொழுதுபோக்கு மட்டுமல்லாமல், ஒருவிதத்தில் இது ஒரு கல்வியாகக்கூட அமையும்.

படிப்பை முடித்துக்கொண்டு, கிராமத் தொண்டுக்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்ள இத்தகைய அலுவல்கள் மிகச் சிறந்த ஒரு வழியாகும்.

# புரட்சிகரமான திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறார் அண்ணா

## அண்ணாவுக்கு வாழ்த்து

### சேலம் நகராட்சி தீர்மானம்

சேலம் நகராட்சிக் கூட்டம், 26—9—68-ல் திரு. ஆர். இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, 'தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களின் 60-ம் ஆண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு இந்நகராட்சி மன்றம் அன்னாருக்குத் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அமெரிக்காவில் தற்போது அறுவைச் சிகிச்சை பெற்று குணமடைந்துவரும் முதலமைச்சர் அவர்கள் முழு நலம் பெற்று விரைவில் தாயகம் திரும்பவேண்டுமென இம்மன்றம் பிரார்த்திக்கிறது' என்று நகர மன்றத் தலைவர் ஆர். இராமகிருஷ்ணன் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது.

## குழந்தைகட்கு சத்துணவு

### அமெரிக்கக் 'கேர்' நிறுவனத்தின் மற்றொரு திட்டம்

#### அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

தரங்கம்பாடி, அக். 9—

தமிழகத்தில் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட விருக்கிறது. இந்தச் சத்துணவை அமெரிக்காவிலுள்ள 'கேர்' நிறுவனம் அளிக்கும்.

5 வயதுக்குக்கீழ் உள்ள குழந்தைகளுக்கு நல்ல உடல் வளர்ச்சி ஏற்படுவதற்காக இந்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இத்தகவலைத் தெரிவித்த கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், 'கேர்' நிறுவனத்தின் உதவி மூலம் மதிய உணவுத் திட்டமும் விரிவுப்படுத்தப்படும்' என்று தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது :-

### நடமாடும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம் திறப்பு

"தமிழகத்தில் 15 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்து உணவு அளிக்கும் திட்டத்திற்கு உதவ அமெரிக்க 'கேர்' நிறுவனம் தயாராக இருக்கிறது. இந்தத் திட்டம் 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு நல்ல உடல் வளர்ச்சி ஏற்படுவதற்காக செயல்படுத்தப்பட விருக்கிறது. இந்தத் திட்டத்தை எத்தகைய முறையில் செயல்படுத்தலாம் என்பது குறித்து அதற்கான குழு பரிசீலனை செய்துவருகிறது; குழு அளிக்கும் சிபாரிசுகளுக்கிணங்க இந்தத் திட்டம் அமுலாக்கப்படும்.

### மதிய உணவுத் திட்டம்

'கேர்' நிறுவனத்தின் உதவிமூலம் திருப்பெரும்புதூரில் மதிய உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது; அடுத்த ஆண்டில் இந்தத் திட்டம் 73 ஊராட்சி ஒன்றியங்களில் விரிவுபடுத்தப்படும். 1972 அல்லது 1973-ம் ஆண்டுக்குள் இந்தத் திட்டம் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

அமெரிக்க 'கேர்' நிறுவனம் தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளுக்காக வழங்கியுள்ள நடமாடும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடங்களின் திறப்புவிழா மாயூரத்தில் நடைபெற்றது.

மோட்டார் வண்டியில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஒவ்வொரு விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடமும் ரூ. 55,000 செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்கூடத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் அமைச்சர் கூறியதாவது :—

அறிவியல் மனப்பான்மை, அறிவியல் உணர்வு ஆகியவை பெரும் அளவில் மாணவர்களிடையே பெருக வேண்டும்; அதற்குத் தேவையான பொறுமையும் கட்டுப்பாடும் மாணவர்களிடையே சிறப்பாக வளர வேண்டும்."

## 'அரசியலில் சகோதர உணர்வையூட்டியவர்'-- கி. ஆ. பெ. விசுவநாதம் புகழ்மாலை

கோவை-3-வது வட்டார (பாப்பநாய்க்கன்பாளையம்) தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின் அறுபதாம் ஆண்டு பிறந்த நாள் விழா செப்டம்பர் 20 முதல் 22-ம் நாள் முடிய மூன்று நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதல் நாள் நிகழ்ச்சி திரு. அறிவாளி பி.ஏ.பி.டி. தலைமையில் நடைபெற்றது.

முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

3-வது வட்டார தி.மு.க. சார்பில் உருவாக்கப்பட்ட அண்ணா 60-ம் ஆண்டு பிறந்த நாள் மலரை திரு கி. ஆ. பெ. விசுவநாதம் வெளியிட்டார்.

முதல் மலரை கோவை நகரத் தி.மு.க. செயலாளர் ரூ. 61 கொடுத்துப் பெற்றுக்கொண்டார்; அடுத்து தோழர் இராசா ரூ. 60 கொடுத்து ஒரு மலரைப் பெற்றுக் கொண்டார்.

### கி. ஆ. பெ. விசுவநாதம்

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

"தமிழக அரசியல் வாழ்வில் ஒரு சகோதர மனப்பான்மையை ஊட்டியவர் அறிஞர் அண்ணா தான்!

பெரியார், இராஜாஜி போன்றவர்களெல்லாம் அண்ணாவைவிட வயதில் மூத்தவர்களாக இருந்தாலும், அண்ணாதுரையை, 'அண்ணா' என்றழைக்கும் அளவுக்கு அவர் உயர்ந்த பண்பாளராக இருக்கிறார்.

அவர், தாம் அறிஞர் என்பதை தமது ஒவ்வொரு செயலிலும் புலப்படுத்தி வருகிறார்.

60-வது ஆண்டில்தான் ஒருவர் உண்மையான மனிதராகச் செயல்பட முடியும்; இதை என் வாழ்நாளில் கண்டிருக்கிறேன்.

என்னுடைய 25-வது வயதில் ஒரு கட்டுரை எழுதினேன்; அப்போது அதைப் படித்துப் பார்த்து, 'நம்மைவிட யார் இப்படி எழுத முடியும்' என்று பெருமைப்பட்டேன்.

பின்னர் 10 ஆண்டுகள் கழித்து அதே கட்டுரையை எடுத்துப் பார்த்தபோதுதான், 'எவ்வளவு மோசமாக நாம் எழுதி இருக்கிறோம்' என்பது தெளிவாயிற்று.

அதேபோல், 40-ஆம் வயதில் எழுதிய ஒரு கட்டுரையை 50-ஆம் வயதில் படித்துப் பார்த்தபோது, அதில் இருந்த தவறு புலப்பட்டது.

ஆனால் 60-ஆம் வயதில் நான் எழுதியது இன்றும் என்றும் சிறப்பாக இருக்கிறது.

எனவே, 60-ஆம் வயதில்தான் மனிதன், மனிதனாக இருப்பான்; ஆனால் 55- அல்லது 58-வது வயதில் அரசு அலுவலர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறும் நிலை உள்ளது.

என்னைக் கேட்டால், '60-ஆம் வயதுக்குப் பின்னர்தான் ஆட்சி செய்ய விடவேண்டும்' என்பேன்; அவ்வகையில் அண்ணா அவர்கள் 60-ஆம் ஆண்டில் அரசுப் பொறுப்பேற்று, புரட்சிகரமான திட்டங்களை வெற்றிகரமாக நடத்திவருகிறார்.

அரசியல் வாழ்வில் அண்ணா அவர்கள், தனிச் சிறப்புப் பெற்ற தலைவர் ஆவார்! அரசியல் கட்சிகளிடையே தோழமை உணர்வையும், தம் கட்சிக்குள் அண்ணன்—தம்பி உறவையும் வளர்த்த ஒப்புயர்வற்ற ஒரே தலைவர் அண்ணா தான்! தமிழகத்தின் பார் புகழும் நல்லறிஞராகத் திகழ்கின்றார்!

தமிழகத்தில் 330 இந்திப் பள்ளிகளை மத்திய அரசு அறிவித்துள்ளது; இது இந்திய நாட்டின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதாகும்.

'பதினான்கு மொழிகளுக்குச் சம இடம்' என்று கூறிக்கொண்டு, இந்தி மொழி வளர்ச்சிக்கு மட்டும் இப்படிச் செலவு செய்வது என்பது வேடிக்கையாக உள்ளது!

4-கோடி மக்கள் பேசும் ஒரு மொழிக்காக (இந்திக்காக) 40 கோடி மக்கள் அளிக்கும் வரிப் பணத்தை எடுத்துச் செலவு செய்ய ஒருபோதும் அனுமதியோம்!

அப்படி மீறி ஆரம்பித்தால் அதனை எதிர்த்து முறியடிக்க எத்தகைய தியாகம் செய்யவும் தமிழ் மக்கள் தயங்கமாட்டார்கள்!,'

## ஆலைத் தொழிலாளர்களுக்குப் போனஸ்

### மூடப்பட்ட ஆலைகளும் கொடுக்க முயற்சி

கோவை, அக். 10—

கோவை மாவட்டத்திலுள்ள தென்னிந்திய ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கத்தைச் சேர்ந்த 61 ஆலைகளைச் சேர்ந்த சுமார் 42,000 தொழிலாளர்களுக்கு இவ்வாரக் கடைசிக்குள் பூரிப்பு ஊதியமாக (போனஸ்) ரூ. 52 இலட்சம் கிடைககும்.

61 ஆலைகளில் 13 ஆலைகள் தான் சட்டப்படி, தரவேண்டிய நான்கு சதவிகித போனசைவிட அதிகமான தொகை கொடுக்கும். எஞ்சிய 48 ஆலைகள் நான்கு சதவிகிதமே கொடுக்கும்.

இந்த மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள 18 ஆலைகள் இந்த உடன்பாட்டில் சேர்க்கப்படவில்லை. எனினும் அந்த ஆலைகளின் நிர்வாகிகள், தொழிலாளருக்குக் குறைந்தபட்ச போனஸ் கொடுக்குமாறு செய்யத் தாங்கள் முயற்சி செய்வதாக சங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

## சூயஸ் கால்வாய் வழி புறக்கணிப்பு

### 208 மைல் நீளமுள்ள எண்ணெய் குழாய் அமைப்பு

சூடஸ் பகுதியிலிருந்து மத்தியதரைக் கடல் பகுதிவரையிலான 208 மைல் நீளத்திற்கு எண்ணெய்க் குழாய்கள் அமைக்கும் வேலை பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றின் மேற்பார்வையில் விடப்பட்டிருக்கிறது. 60 மில்லியன் பவுன்கள் செலவில் இந்த எண்ணெய்க் குழாய்கள் போடப்படுகின்றன.

புதிய குழாய் அமைப்பினால் சூயஸ் கால்வாய் வழி புறக்கணிக்கப்பட்டு, மேற்கு ஆசியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் புதிய எண்ணெய் போக்குவரத்து வழி ஒன்று உருவாகும்.

குழாய் போடும் வேலை 1969-ம் ஆண்டு மத்தியில் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 42 அங்குல குறுக்களவுள்ள இந்தக் 'குழாய் வழி'யின் மூலம் 1970-ல் முதன் முதல் எண்ணெய் அனுப்பப்படும். ஆண்டுதோறும் 50 மில்லியன் டன் எண்ணெய் இதில் அனுப்ப முடியும்.

ஈரானில் 160 மில்லியன் பவுன்கள் செலவில் போடப்பட்டுவரும் 620 மைல் நீள எண்ணெய்க் குழாய் வழியும் இதே நிறுவனத்தின் மேற்பார்வையில் நடைபெற்றுவருகிறது.

பிரிட்டனிலேயே உள்ள எரிவாயு செலுத்தப்படும் 123 மைல் நீளமுள்ள குழாய் வழியும் இவர்கள் மேற்பார்வையில் உருவானது தான்.

## செய்தி அனுப்புவோர் கவனிக்க :

'நம் நாடு' இதழில் வெளியிடுவதற்கென அனுப்பப்படும் செய்திகள் யாவும் சுருக்கமாகவும், தெளிவாகவும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பப்பட வேண்டும்.

கழக சம்பந்தமான செய்திகளும், துணைமன்றச் செய்திகளும் கிளைக் கழகச் செயலாளரின் கையொப்பம் பெற்று அனுப்பப்பெற வேண்டும்.

—ஆசிரியர்

## அந்தநல்லூரில் குடும்பக் கட்டுப்பாட்டு விழா

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குழுமணி ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடும்பக்கட்டுப்பாடு திட்ட இருவார விழா 26—9—68-ல் நடைபெற்றது.

திருச்சி சோட்டாட்சித் தலைவர் எல். சூரியநாராயணன் தலைமை தாங்கினார். திரு. ஏ. சச்சிதானந்தம் வரவேற்றார்.

திரு. எல். சூரியநாராயணன், நாட்டின் மக்கட்தொகையை கனிசமான அளவு குறைத்து மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு வழி வகுக்கவே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது எனவும், சாதி -- மத பேதமின்றி எல்லோரும் இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு, நாட்டு முன்னேற்றத்திற்கு வழிவகுக்க அரசுடன் ஒத்துழைத்துத் திட்டம் வெற்றிபெற ஆவன செய்தல் வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

விழாவில் அதிகாரிகளும் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் எம். செஞ்சப்பன் நன்றி கூறினார்.

குடும்ப நலத் திட்ட கண்காட்சி ஒன்றும் திறந்துவைக்கப்பட்டது.

அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய பள்ளி மாணவ — மாணவிகளால் குடும்ப நலத் திட்ட சம்பந்தமான கலை நிகழ்ச்சிகளும் ஆடல் பாடல்களும் இடம் பெற்றன. இரவில் படக் காட்சி காண்பிக்கப்பட்டது

## பெரியகுளத்தில் அண்ணா மன்றத் திறப்பு

பெரியகுளம் 2-வது வட்டத்தில் 14—9—68 அன்று திரு. கே. எம். எம். மேத்தா எம்.எல்.ஏ. அவர்களால் அண்ணா மன்றம் திறக்கப்பட்டது.

தோழர் பி. பாண்டியன் கழகக் கொடி ஏற்றினார்.

15—9—68 அன்று நகர தி.மு.க. செயலாளர் எம். கே. ஆறுமுகம் தலைமையில் அண்ணா பிறந்த நாள் விழாக் கொண்டாடப்பட்டது; குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

## மதுரை ரிக்ஷாத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

மதுரை நகர் திராவிட சைக்கிள் ரிக்ஷாத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க அமைப்புக் கூட்டம், 17—9—68-ல் தோழர் கே. தாவூது தலைமையில் நடைபெற்றது; அதுபோது, கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : ப. இராமு; செயலாளர் : எம். எம். முத்தரசு; துணைச் செயலாளர் : கே. தாவூது; பொருளாளர் : அழகரடி பாண்டி; மற்றும் 19-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

ஆசிரியருக்கு மடல்

## பெரியாருக்கு அஞ்சல் தலை வெளியிடுக

ஐயா,

திராவிடத் தந்தை பெரியார் இராமசாமி அவர்கள் கடந்த 40 ஆண்டுகளாகத் தென்னகத்தில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்துவருகிறார்; சீர்திருத்தப் பிரச்சாரம் செய்கிறார்; மக்களின் அறியாமையைப் போக்குவதில் அவருக்கு ஈடு அவரே!

சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்புப் போன்ற சமுதாயப் பணிகளைச் சிறப்பாகச் செய்துவரும் அவருக்கு அண்மையில் தமிழகமெங்கும் 90-வது பிறந்த நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சீர்திருத்தச் செம்மல் பெரியாருக்கு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பிக்க வேண்டும்.

இதற்குத் தென்னக நாடாளுமன்ற உறுப்பினர்கள், அஞ்சல் துறை அமைச்சரிடம் சொல்லி ஆவன செய்யவேண்டும்.

ஏ. நடராசன்
தாரமங்கலம்

## சதுமுகை எம்.ஜி.ஆர். மன்றத் துவக்க விழா

19—9—68-ல், சதுமுகையில் அண்ணா பிறந்த நாள் விழாவும் எம்.ஜி.ஆர். மன்றத் துவக்க விழாவும் வா. வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றது.

மன்றத்தை, ஈரோடு சின்னச்சாமி எம்.எல்.ஏ. திறந்துவைத்தார்.

எம்.ஜி.ஆர். உருவப் படத்தை சத்தி கண்ணப்பா திறந்துவைத்தார். எஸ். ஆர். பொன்ராஜ நன்றி கூறினார்.

மன்றத்திற்குப் பின்வருமாறு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : பழனியப்பன்; துணைத் தலைவர் : எஸ். சி. சுப்பிரமணியன்; செயலாளர் : எஸ். வி. சந்திரன்; துணைச் செயலாளர் : எஸ். எஸ். நடராஜ்; பொருளாளர் : எஸ். கே. சுப்பிரமணியம்.

## கலைக் குழு முகவரி :

'சாயம் போன சரக்கு' என்னும் கழகப் பிரசார நாடகம் நடத்த விரும்புவோர் தொடர்புகொள்க:—

இராசமன்னார் கலைக் குழுவினர்'
546, டி. எச். ரோடு,
சென்னை-21.

துரை. நாரணன் கலைக் குழு,
'முரசொலி' மிதிவண்டி நிலையம்,
திருவில்லிபுத்தூர்,
முகவை மாவட்டம்

மணிவண்ணன் கலைக் குழுவினரின் 'புயலுக்குப் பின்...?' என்ற நகைச்சுவையும் நற்கருத்தும் நிறைந்த தேர்தல் பிரச்சாரக் கலை நிகழ்ச்சி நடத்த விழைவோர் தொடர்பு கொள்க :—

மணிவண்ணன்,
12/16, கிருட்டிணசாமி கோயில் தெரு, சேனம்பேட்டை,
சென்னை-18

## இரங்கல்

பெங்களூர்—சுதந்தர நகர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் தி. ரங்கசாமி திடீரென இயற்கையெய்தினார்; அவருடைய மறைவு, கருநாடக மாநில தி. மு. க.-வுக்கே பேரிழப்பு ஆகும். அன்னாரின் உடல் அடக்கம் மாநில தி. மு. க. அமைப்பாளர் தி. திராவிடமணி தலைமையில் -- கழகத் தோழர்கள் அணிவகுப்பு மரியாதையுடன் நடைபெற்றது.

இரங்கல் கூட்டத்தில் டாக்டர் சி. பாலசுந்தரம், செயலாளர் வி. கே. நாகலிங்கம், மு. இராமன், சாமிதுரை ஆகியோர், மறைந்த தோழரின் அரும் பணிகளைப் பாராட்டிப் பேசினர். அன்னாரின் குடும்பத்தாருக்குக் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபமும், ஆறுதலும் தெரிவிக்கப்பட்டது.

# அண்ணனுக்குத் தரும் பரிசு

[புலவர் பொன்னிவளவன்]

★

மின்னலைப்போல் காங்கிரசார் தேர்தல் நேரம்
மின்னிடுவர்; மறைந்திடுவர்! அவர்கோ டுக்கும்
இன்னலிலும் இழிநிலைநாம் போக்கு கின்றோம்!
எண்ணஅலை இதயத்தில் எழுந்து துள்ளக்
கன்னலைப்போல் தித்திக்கப் பேசு கின்ற
கழகத்துத் தோழர்களே! நமக்குக் காந்தி
அண்ணலைப்போல் வாய்த்திருக்கும் அண்ணா நெஞ்சில்
ஆனந்தத் தேன்பாய்ச்ச எழுந்து வாரீர்!

கட்டிவைத்த பூச்சரமா வெற்றி? இல்லை!
கடும்உழைப்புப் பெறுகின்ற பரிசு! தட்டில்
வெட்டிவைத்த செங்கரும்புத் துண்டா வெற்றி?
விழிப்புணர்ச்சி, செயல்திறமை, மக்கள் காதில்
கொட்டிவைத்த நம்கொள்கை முழக்கம் நம்முன்
குவிக்கின்ற காணிக்கை! தேர்தல் தன்னில்
தட்டிவைப்போம்! சுவரொட்டி ஒட்டி வைப்போம்!
தகுந்தபடி வெற்றியில்நம் நினைவை வைப்போம்!

கண்ணனுக்குப் பிடித்தபொருள் வெண்ணெய் என்பர்!
காங்கிரசைப் பிடித்ததுவோ பதவி ஆசை!
மன்னனுக்குப் பிடித்ததுவோ புலவர் பாட்டு!
மங்கையர்க்குப் பிடிப்பதுவோ புதிய சேலை!
முன்னேற்றக் கழகத்தார் நமக்கோ அண்ணா
முத்தமிழ்வாய் நமைப்புகழ்ந்தால் மிகப்பி டிக்கும்!
அண்ணனுக்குப் பிடித்ததெது? கழக வெற்றி!
அதைஅடைய உழைத்திடுவோம்! விரைந்து வாரீர்!

சென்னைமா நகராட்சி நமக்குச் சொந்தம்!
சீரழிந்த காங்கிரசின் நிலையோ மந்தம்!
உன்னைஎன்னைப் பார்க்கின்ற வெளியூர் மக்கள்
ஓயாமல் வினவுகின்றார் நிலைமை பற்றி!
பொன்னல்ல; வாடும்பூ மாலை யல்ல;
பொருளல்ல நம்நெஞ்சில் நிலைத்து நிற்கும்
அண்ணனுக்குத் தரும்பரிசு வெற்றி! வெற்றி!
அதைப்பெறுவோம்! புகழ்பெறுவோம்!
உழைப்போம்! வெல்வோம்!

# 'இந்தி' ஆபத்து இன்னும் நீங்கவில்லை!

'நாம் இந்தியை எதிர்த்து எடுத்துக்கொண்ட முயற்சிகள், இன்னும் முற்றுப் பெறவில்லை.

"'இந்தியை எதிர்த்து முழு வெற்றி அடைந்துவிட்டோம்' என்று கருதினால், அது, நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது போலாகும்.

"டெல்லியில் உள்ளவர்கள், இன்னும் இந்தித் திணிப்பில் தீவிரம் காட்டிவருகிறார்கள்; நம் முதுகில் தட்டிக் கொடுத்துக்கொண்டே,

**'நாடு ஒன்றாக இருக்க ஒரு மொழி வேண்டாமா?'**

என்று கூறி ஏமாற்றி, ஒரு மொழியின் ஆதிக்கத்துக்கு வித்திட -- நம்மை உட்படுத்த நினைக்கிறார்கள்!"

---அமைச்சர் செ. மாதவன்

('அண்ணாவுக்கு அறுபது' மலர் வெளியீட்டு விழாவில்)

# கழகக் கட்டுப்பாட்டினை மீறிய உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை

அண்மையில் நடைபெறவிருக்கும் சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்பித் தலைமைக் கழகத்திற்கு அவரவர் அளித்திருந்த உறுதிமொழிக்கும், கழக ஆட்சி மன்றக் குழு எடுத்த முடிவுக்கும், தலைமைக் கழகம் அடுத்தடுத்து விடுத்த எச்சரிக்கை—வேண்டுகோள் ஆகியவைகளுக்கு மீறிய வகையிலும், கழகச் சட்ட திட்டங்களுக்குப் புறம்பாகவும், கழகக் கட்டுக்கோப்பு—ஒற்றுமை உணர்வு ஆகியவைகளைச் சீர்குலைக்கும் வகையிலும் கழகத்தின் வேட்பாளர்களுக்கும், தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் எதிராகச் சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடும் கழக உறுப்பினர்கள்மீது தலைமைக் கழகம் முறைப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் மாநகராட்சித் தேர்தலில் கழகக் கட்டுப்பாட்டை மீறிய வகையில் செயல்பட்டு வருபவர்கள் இருப்பார்களாயின் அந்த உறுப்பினர்கள் குறித்தும் உடன் விவரம் அறிவிக்குமாறு சென்னை மாவட்டக் கழகச் செயலாளரைத் தலைமைக் கழகம் கேட்டிருக்கிறது. மாவட்டச் செயலாளரிடமிருந்து விவரம் கிடைத்ததும் அதனை ஆராய்ந்து அவர்கள் மீதும் முறைப்படி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

'அறிவகம்', சென்னை-13 } 11—10—68

இரா. நெடுஞ்செழியன்
(பொதுச்செயலாளருக்காக)

# மத்திய அரசின் தான்தோன்றிப்போக்கு

## காங்கிரசு முதல்வரே கண்டிக்கிறார்

பெங்களூர், அக். 11—"தங்களுடைய சிப்பந்திகளுக்குக் கிராக்கிப் படி உயர்வு அளிப்பதென்று ஒருதலைபட்சமாக மத்திய அரசு முடிவு செய்திருப்பது நாட்டின் பொருளாதாரத்தையே பாதிக்கும்"

என்று மைசூர் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் கூறியிருக்கிறார்.

"மாநில அரசுகளைக் கலந்து பேசாமல் இந்த உயர்வை அறிவிக்க வேண்டாமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்" என்றும் அவர் கூறிவிட்டு மேலும் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அரசு தானாகக் கிராக்கிப் படியை உயர்த்தினால் மாநில அரசுகளும் அதைப் பின்பற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது; இதனால் மாநிலங்களின் பட்ஜெட் நிலைமை பாதிக்கப்படுகிறது."

# நடக்க இருப்பவை

## பொதுக்கூட்டங்கள்

## 12--10--68

**வீரப்பன்சத்திரம்**

கலை மன்றத் திறப்பு விழா; மாலை 7-மணிக்கு பாரதி தெரு அண்ணா திடலில்; தலைவர்: இரா. தேவராசன்; பேசுவோர்: நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., செ. அ. இராசமாணிக்கம், ப. ச. விசுவநாதன், இரா. சென்னியப்பன், டாக்டர் சேதுபாஸ்கரன், செங்குட்டுவன், சி. தங்கமுத்து, கி. மதிவாணன், சிவ. நடராசன்.

## குழுக் கூட்டம்

சாத்தூர் வட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம், 13—10—68 மாலை 3 மணிக்கு சாத்தூர் பயணிகள் விடுதியில் நடைபெறும்; அழைப்புக் கிடைக்காத செயற்குழு உறுப்பினர்களும் இதனையே அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் கோ. வரதராசன் கேட்டுக் கொள்கிறார்.

## கோவை மு. இராமநாதன்

சுற்றுப்பயணம்

அக். 12, 13: நெல்லை, அம்பாசமுத்திரம்; 14: இராமநாதபுரம்; 15, 16: தாரை வட்டம்.

# சென்னை 111-வது வட்ட தேர்தல் அலுவலகத் திறப்பு

சென்னை 111-வது வட்ட தி.மு.க. தேர்தல் அலுவலகத் திறப்பு விழா, 13—10—68 மாலை 5-மணிக்கு அமைந்தகரை அண்ணா மன்றத்தில் நடைபெறும்; தலைவர்: காஞ்சி. மணிமொழியார்; திறப்பாளர்: முரசொலி மாறன் எம்.பி.

# சென்னை 119-வது வட்ட தேர்தல் அலுவலகத் திறப்பு

சென்னை 119-வது வட்ட தி.மு.க. தேர்தல் அலுவலகத் திறப்பு விழா, 13-10-68 காலை 9-மணிக்கு வெங்கடபுரத்தில் நடைபெறும்; தலைவர்: எம். கோபால் எம்.எல்.ஏ.; திறப்பாளர்: முரசொலி மாறன் எம்.பி.; பேசுவோர்: தி. ந. சம்பந்தம், தேவராசு, சின்னசாமி, இராமச்சந்திரன்.

## கோவையில்

# அரசு அலுவலர் குடியிருப்புத் திறப்புவிழா

தமிழக வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கோவை ரெட் பீல்டில் கட்டப்பட்டுள்ள மாநில அரசு அலுவலர் குடியிருப்புகளின் திறப்பு விழா, 12—10—68 அன்று சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் தலைமையில் நடைபெறும்; சுகாதார அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா திறந்து வைப்பார்.

# காந்தி வழியில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதியழகன், கோவிந்தசாமி ஆகியோருக்கும், நகர தி. மு. க. சார்பில் செயலாளர் மாணிக்கம், கைத்தறி ஆடைகளை அணிவித்தார்.

மாவட்ட தி. மு. க. செயலாளர் கே.டி எஸ். மணி நன்றி கூறினார்.

# சென்னையில் வரவேற்பு

மத்திய உணவு அமைச்சர் செகசீவன் ராம், நேற்று சென்னைவந்து சேர்ந்தார்; விமான நிலையத்தில் அவரை அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, மற்றும் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. உள்ளிட்ட பலரும் வரவேற்றனர்.

# சென்னை 10-வது வட்ட வாக்காளர்கட்கு

## அறிவிப்பு

"நடைபெறவிருக்கும் மாநகராட்சி மன்றத் தேர்தலில் நான் தி. மு. க. சார்பில் 10-வது வட்டத்தில் போட்டியிட தலைமைக் கழகத்திற்கு மனுச் செய்திருந்தேன்; தலைமைக் கழக ஆய்வுக் குழு 10-வது வட்ட உறுப்பினர் த. வெங்கடேசனை மீண்டும் தேர்ந்தெடுத்தது; அந்த முடிவினை, கழகத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு நான் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டேன்.

"அதே 10-வது வட்டத்தில், சுயேச்சை வேட்பாளராக சந்திரசேகரன் என்பவர் போட்டியிடுகிறார். அந்த வேட்பாளருக்கும்—த. ச. சேகர் என்ற எனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதை நண்பர்கட்கும், வட்டப் பொதுமக்கட்கும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்"

என்று எண்ணூர் பவுண்டரீஸ் தி. மு. க. தொழிலாளர் குழுச் செயலாளர் த. ச. சேகர் அறிவிக்கிறார்.

# டில்லி மிரட்டலுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சியல் அமைப்புக்கு முரணானது தான்."

"அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி சட்டம் -- அமைதியைக் காப்பது மாநில அரசின் பொறுப்பாகும்.

இந்த வேலை நிறுத்தத்தைச் சமாளிப்பதற்கு மத்திய ரிசர்வ் போலீசை எந்த மாநிலத்துக்காவது அனுப்ப வேண்டும் என்று மத்திய அமைச்சர் நினைத்திருந்தால், சம்பந்தப்பட்ட மாநில அரசின் கருத்தை அவர் கேட்டிருக்க வேண்டும்.

தங்களுடைய தேவைகளுக்காக அரசியல் அமைப்பின் விதிகளை மீறிய மத்திய அரசுத் தலைவர்கள், இப்போது எங்கள்மீது பாய்கிறார்கள்; தங்கள் விருப்பப்படி காரியங்கள் செய்ய முடியாதென்பதை அவர்கள் உணரவேண்டும்."

# தேர்தல் பிரச்சார சைக்கிள் ஊர்வலம்

**வண்ணைப் பகுதி:**

வண்ணைப் பகுதி தி. மு. க. சார்பில், தேர்தல் பிரச்சார சைக்கிள் ஊர்வலம், மு. இராமையா தலைமையில், 13—10—68 பிற்பகல் 2-மணிக்கு இராயபுரம் 'அறிவக'த்திலிருந்து புறப்பட்டு, பகுதியின் முக்கிய தெருக்கள் வழியே சென்று 9-வது வட்டம் மீனாட்சியம்மன்பேட்டையில் முடிவடையும்; பகுதிச் செயலாளர் பி. கே. மாரியப்பன் ஊர்வலத்தைத் துவக்கிவைப்பார்; தோழர்கள் சி. இராசகோபால், தவசிமுத்து ஆகியோர் ஊர்வலத்தை முன்னின்று நடத்திவருவர்; கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் கொடியுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**சென்னை 80-வது வட்டம்:**

தி. மு. க. வேட்பாளர் டி. குப்புசாமியை ஆதரித்து 13—10—68 காலை 10 மணிக்கு, டாக்டர் நடேசன் ரோடு தி. மு. க. பணிமனையிலிருந்து, அருணன் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, வட்டம் முழுவதும் சுற்றி வரும்.

## கலை நிகழ்ச்சி

சென்னை 111-வது வட்ட தி.மு.க. வேட்பாளர் செ. மோகனப்பாவை ஆதரித்து, 13—10—68 இரவு 9-மணிக்கு அமைந்தகரை பெருமாள்கோயில் தெருவில், எம். சி. பாலகிருட்டினன் தலைமையில், குமாரி விஜயா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

# தி. மு. கழக வேட்பாளர்களுக்கு அறிவிப்பு

தங்கள் வட்டங்களில் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் ஏற்பாடு செய்ய விரும்பும் வேட்பாளர்கள், கூட்ட ஏற்பாட்டுச் செலவுகளுக்காகக் கூட்டம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் (ரூ. 5) செலுத்தி, தேதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

1 முதல் 60 வட்டங்கள் வரை 'அறிவகத்'திலும்; 61 முதல் 120 வட்டங்கள் வரை 'அன்பக'த்திலும் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்று, சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

# திருவரங்கத்தில் எஸ். எஸ். ஆர். கலைநிகழ்ச்சி

திருவரங்கம் நகர தி.மு. க. சார்பில் 13—10—68 இரவு 7 மணிக்கு வாசுதேவன் மன்றத்தில் -- அன்பில் தர்மலிங்கம் தலைமையில், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின் 'அண்ணாவின் அரசு' என்னும் வில்லுப் பாட்டுக் கலைநிகழ்ச்சி நடைபெறும்; தோழர்கள் ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., ஜி. பராங்குசம் எம்.எல்.சி., எம். எஸ். வெங்கடாசலம், சு. நெடுமாறன், மு. நடராசன், க. இராசவேலு ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்ற [illegible] கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-13) அச்சிட்டு [illegible]